Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து...செவ்வையான பாதையில் என்னை நடத்தும் சங்.27:11 ஜூன் 2025 **No.6**

கிறிஸ்துவின் மகத்துவம்

The excellency of Christ

Jonathan Edwards (1703 - 1758)

".....ஒருவன் தாகமாயிருந்தால் வந்து பானம் பண்ணக் கடவன்"(யோ.7:37). "....தாகமாயிருக்கிறவன் வரக் கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்"(வெளி.22:17).

உலக மக்கள் உண்மையான மகத்துவமும், சந்தோஷமும் அவர்கள் தேடிக் கொண்டிருப்பவைகளில் இருப்பதாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைப் பெற்றுக்கொண்டால் சந்தோஷமடையலாம் என்றும் இல்லாவிட்டால் வேறெதையாகிலும் தேடி சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஒருவர் ஐசுவரியத்தை மிக மேலானதாகவும் இன்னொருவர் கனத்தை மிக உயர்வாகவும் மற்றொருவர் மாம்சீக சந்தோஷங்களை மேலானதாகவும் கருதினாலும் ஆத்துமா இவை எவற்றிலும் திருப்தியைப் பெற்றுக் கொள்வதில்லை.

ஆனால் கிறிஸ்து இயேசுவிடம் உண்மையான மகத்துவமுண்டு. அது அதிக மேலானதாயிருப்பதால் நாம் வேறு எதையும் நோக்காமல் நமது உள்ளம் அதிலேயே தங்கிவிடுகிறது. அங்கு மிக உயரிய மகிமையையும் சொல்லி முடியாத இனிமையையும் காண்கிறோம். இதுவரை நிழலாட்டங்களைத் தேடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இப்போது நிஜப் பொருளைக் கண்டுபிடித்துவிட்டோம். நீரோடையில் சந்தோஷத்தைத் தேடினோம். இப்போது நாம் அதனை சமுத்திரத்தில் கண்டுபிடித்துவிட்டோம்.

ஆத்துமாவுக்கு அளவு கடந்த திருப்தியளிப்பது

கிறிஸ்துவின் மகத்துவம் ஆத்துமாவின் இயற்கையான வாஞ்சைக்குத் தகுதியான ஒன்றாகும். இதயத்தின் கொள்ளளவை நிரப்புவதற்கு அது போதுமானது. கிறிஸ்துவிலுள்ள அளவு கடந்த மகத்துவம் மனத்தின் விருப்புக் கேற்றது. அதோடு அது எல்லையற்றது. மனம் அதனை அதிகமதிகமாக சிந்திக்க சிந்திக்க அவரது மகத்துவம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் அவரது அழகை இன்னும் அதிகரிக்கிறது, அது மனதிற்கு எட்டாதது.

ஆத்துமா முதலாவது அவரது அழகைப் பார்க்கும் போது அதன் சிறந்த அழகு களைப்பை ஏற்படுத்துவதில்லை. அவரது மகத்துவம் எப்போதும் புதிதாகவும், புத்துணர்வுடனும், மகிழ்வூட்டுவதாகவும், ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகள் பார்த்தாலும் முதலாவது பார்த்தது போலவேயிருக்கும். அவரது மகத்துவம் ஒப்பிடக்கூடாதது.

இயேசுகிறிஸ்துவின் மகத்துவம் பகுத்தறிவுள்ள ஆத்துமாவுக்கு பொருத்தமான உணவாயிருக்கிறது. அவரிடம் வரும் ஆத்துமா இதைப் புசித்து அதனால் உயிர்வாழ்கிறது. இது வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம், இதைப் புசிக்கிறவன் மரிப்பதில்லை யோவா.6:50. இது துதர்களின் உணவு. பணமும் விலையுமின்றி அருளப்படுகிற திராட்சரசமும் பாலும் (ஏசா.55:1-2). இதன் கொழுப்பினால், விசுவாசிக்கும் ஆத்துமா களிகூருகிறது. வாஞ்சையுள்ள ஆத்துமா திருப்தியடைகிறது. பசியுள்ள ஆத்துமா நன்மைகளால் நிரப்பப்படுகிறது. இங்கு காணப்படும் சந்தோஷமும் திருப்தியும் புரிந்து கொள்ளக் கூடாதது. மேலும் சொல்லக்கூடாததும் மகிமை நிறைந்தது மாம். ஆத்துமா ஜீவ தண்ணீருள்ள நதியைக் கண்டுபிடித்துவிட்டதால் இனி எந்த பானமும் அதற்குத் தேவையில்லை. ஜீவ விருட்சத்தைக் கண்டுபிடித்து விட்டபடியால் இனி வேறு எந்த கனியையும் விரும்புவதில்லை.

கிறிஸ்துவின் அன்பு

கிறிஸ்துவின் அன்பின் வெளிப்பாடு அதிகமான திருப்தியை ஆத்துமாவிற்கு அளிக்கிறது. அவரது அன்பு அளவற்ற இனிமையும் அதோடு திருப்தியளிப்பதுமாயிருக்கிறது. ஜீவனைக் காட்டிலும் நலமானது, ஏனெனில் இந்த அன்பு அதிக மதிப்பும் மகத்துவமான ஒருவருடையது. இவ்வுலகைப் படைத்தவரின் அன்பு எவ்வளவு மகிழ்ச்சிக்குரியது. அவர் உலகத்தையும் அதிலுள்ளவாவற்றையும் படைத்தவர். உயர்த்தப்பட்டு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவர். உன்னதங்களிலுள்ள அதிகாரங்களுக்கும் வல்லமைகளுக்கும் தலைமையானவர். எல்லாவற்றையும் தமது கால்களுக்கு கீழடக்கினவர். அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, பிதாவின் மகிமையின் பிரகாசம்.

கிறிஸ்துவின் அன்பு இனிமையும் திருப்தி தருவதுமாகும். இது மகாப் பெரியது. அது மரிக்கும் அன்பு. இத்தகைய அன்பை இதுவரை எவரும் கண்டதில்லை. இதனை எந்த அன்போடும் ஒப்பிட முடியாது. திருப்தியளிக்கும் தன்மையுடைய இந்த அன்பு அதன் இனிய கனிகளிலிருந்து வருகிறது. தமது ஜனங்களுக்கு கிறிஸ்து அளிக்கும் விலையேறப் பெற்ற நன்மைகள், மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் எல்லாம் இந்த அன்பின் கனியே. சந்தோஷமும், நம்பிக்கையும் இந்த நீரூற்றிலிருந்து தொடர்ந்து பாய்ந்து வரும் நீரோடைகள். இவை கிறிஸ்துவின் அன்பிலிருந்து பாய்ந்து வருகின்றன.

கிறிஸ்து தன்னையே அளிக்கிறார்

மக்களிடம் அவர்களுடைய தீமைகளுக்காகப் பரிகாரமாக தன்னையே அளித்துவிட்டார் என்று கூறி கிறிஸ்துவின் அன்பைப் புகழ வேண்டும். அவர் எல்லா நன்மைகளுக்கும் ஊற்றும் உறைவிடமுமானவர். அவர் தம்மை நமக்கு அளித்ததுமன்றி நமக்குத் தேவையான எல்லாவற்றையும் தருகிறார்.

நமக்கு உடை அவசியம். அவர் நமக்கு உடை மட்டுமல்ல, அவரையே நாம் அணிந்து கொள்ளும் ஆடையாகத் தருகிறார். "...உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" கலா.3:27. "துர் இச்சைக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" ரோமர். 13:14.

நமக்கு உணவு வேண்டும். கிறிஸ்து தம்மையே நமக்குப் போஜனமாக அளித்துள்ளார். அவர் தமது சொந்த மாம்சத்தை நமக்கு போஜனமாகவும், தமது இரத்தத்தைப் பானமாகவும் நமது ஆத்துமாக்களைப் போஷிக்க அருளியிருக்கிறார். இவ்வாறு கிறிஸ்து தாம் வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பம் என்றும் ஜீவ அப்பம் நானே (யோ.6:48) என்றும் கூறியுள்ளார்.

நமக்கு ஒரு வாழிடம் தேவை. நமது பாவத்தினால் நாம் வாழிடத்தைத் தவறவிட்டோம். கிறிஸ்து தமது ஜனங்களுக்குத் தாமே வாழிடமாயிருக்கிறார். "ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு அடைக்கலமானவர்" சங்.90:1. தேவ பிள்ளைகள் என்றென்றைக்கும் தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பார்கள் என்றும் வெளியே செல்வதில்லை என்றும். மேலும் கிறிஸ்துவே புதிய எருசலேமின் ஆலயம் என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

உள்ளே .....

இயேசுவைப் போல பிரசங்கிப்பது
இயேசுவைப் போல ஜீவிப்பது
இயேசுவைப் போல ஜெபிப்பது

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh,
Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங். 85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். ஏசாயா 43:1

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 ஜூன் மாத தூதனுக்காக என் தேவனை நன்றி யோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

ஜெபக்குறிப்பு 2. ***உடன் ஊழியர்களுக்காக***

ஆண்டவருக்காக ஊழியம் செய்கிற அனைவரும் நம்முடைய உடன் ஊழியர்களே. அவர்களுக்காக நாம் தினமும் ஜெபிக்க வேண்டும். வருகையின் தூதன் வாசகரில் அநேகர் ஊழியம் செய்கிறார்கள். அவர்களுக்காகவும், உபவாச ஊழியத் திற்கு தங்கள் ஆலய கதவுகளை திறந்து தந்த ஊழியர்களுக் காகவும் ஜெபிக்கிறேன். 3 முக்கிய குறிப்புகளுக்காக ஜெபிப் போம்.

1. ***சரீர சுகத்திற்காக:*** கொரோனா நாட்களில் அநேக ஊழியர்கள் மரித்து போனார்கள். மாற்று கலாச்சாரம், சுகாதாரமற்ற சூழ்நிலை, சுத்தமற்ற தண்ணீர் போன்ற காரியங்களினால் தேவ ஊழியர்கள் பாதிக்கப்படாமலிருக்க ஜெபிப்போம்.

2. ***பாதுகாப்பிற்காக:*** உத்தர பிரதேச மாநிலத்தில் சுமார் 60 மிஷனெறிகள் சிறைகளில் இருக்கிறார்கள். ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு போதகர் குடும்பம் மத விரோதிகளால் தாக்கப்பட்டதை ஊடகம் வாயிலாக கண்டோம். தமிழ் நாட்டிலும் சுவிசேஷ ஊழியத்திற்கு எதிராக ஏராளமான வன்முறைகள் நடைபெறுவதை காண்கிறோம். தேவ பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

3. ***பொருளாதார தேவைகள்:*** ஊழியர்களுடைய தேவைகளுக் காக ஜெபிப்போம், தாங்குவோம்.

இம்மாத செய்தி :

Preaching like Jesus
இயேசுவைப் போல பிரசங்கிப்பது

அது முதல் இயேசு மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் மத். 4:17.

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீப மாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார் மாற்கு 1:15.

... அவர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பினார்.

அவர்கள் புறப்பட்டுப் போய்: மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து;

அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளி களை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள் மாற்கு 6:11-13.

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக் கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந் தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமான வைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்து கொள்ளத் தொடங்கினார்.

கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து ***மனந்திரும்மியிருப்பார்கள்*** மத்.11:20,21.

எபேசு சபை மனந்திரும்ப வேண்டும்

ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு.

ஆகையால், நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தா யென்பதை நினைத்து, ***மனந்திரும்பி***, ஆதியில் செய்த கிரியை களைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னி டத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் வெளி.2:4,5.

பெர்கமு சபை மனந்திரும்ப வேண்டும்

நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர் களோடே யுத்தம் பண்ணுவேன் வெளி. 2:16.

சர்தை சபை மனந்திரும்ப வேண்டும்

ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு ***மனந்திரும்பு,*** வெளி.3:3.

லவோதிக்கேயா சபை மனந்திரும்பவேண்டும்

நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் ***நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு*** வெளி.3:19.

ஒ தேவனுடைய சபையே மனந்திரும்பு ...

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியூபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

Living like JESUS
இயேசுவைப் போல ஜீவிப்பது

அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி,

தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;

ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார் மத்.9:36-38.

ஒரு தேவனுடைய மனிதர் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

எனது கல்லூரி நாட்களிலும், பொறியாளராய் பணியாற்றிய போதும், மிஷனரிப் பணித்தளங்களுக்குச் சென்று வருவேன். இவ்விதம் நேரடியாய்ச் சென்று நான் "பார்த்ததுதான்" என்னை மன்றாட்டு ஜெபத்திற்கு நடத்தியது. இயேசுவானவர் எங்கும் நடந்து திரிந்து பிரசங்கித்தும் மக்களைக் குணமாக்கியும் வந்தார். ஆனால் திரளான மக்களைக் "கண்டபோதோ" அவர் "***மனதுருகினார்***" என்று வாசிக்கிறோம் மத். 9:35,36. ஏற்கெனவே அவர் மனதுருக்கமுள்ளவர் தானே? ஆனால் நிலையை நேரில் "பார்த்த போது" அது அவரை இன்னும் உலுக்கி உருக்கிற்று.

ஒரு தேவனுடைய மனிதரின் சாட்சி:

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் அட்லாண்டாவிலிருந்து சின்சினாட்டி என்ற இடத்திற்கு விமானத்தில் சென்ற போது எனக்கு அருகில் உட்கார்ந்திருந்த பெண் மிகுந்த கவலையுடனிருப்பதைக் கவனித்தேன். அவளிடம் பேசினபோது அவளது வாழ்வு முடிந்து போவதாக குறிப்பிட்டாள். அவளது கேடான தெரிந்து கொள்ளுதலால் திருமண வாழ்க்கை முடிந்து போவதாயிருந்தது.

எனவே எதிர்காலமே இல்லை என்று எண்ணினாள். அவளோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டு தேவனுடைய வாக்குத்தத்தங்களை எடுத்துக் கூறினேன். அவளில் சிறிய மாற்றம் ஏற்பட்டதை கவனித்தேன்.

விமானம் தரையிறங்கியதும் நான் விடைபெற்றுக் கொண்டு என் பொருட்களை (Luggage) எடுக்குமிடத்திற்குச் சென்றேன். அப்பொழுது அவள் திடீரென என்னிடம் "**நீங்கள் இயேசுவா?**" என்று கேட்டாள். ஒரு வினாடி திகைத்து நின்றேன். இறுதியாக நான் இயேசு அல்ல, ஆனால் அவரை அறிவேன். ***எல்லா மக்களைப் போல எனக்கும் அவர் தேவை*** என்றேன்.

Are you living like JESUS?
நீங்கள் இயேசுவைப் போல ஜீவிக்கிறீர்களா?

Praying like JESUS
இயேசுவைப் போல ஜெபிப்பது

அவர் ஒரு இடத்தில் ஜெபம் பண்ணி முடித்த பின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்தது போல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும் என்றான் லூக்கா 11:1.

LORD, teach us to pray

1. அதிகாலை ஜெபம்

அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம் பண்ணினார் மாற்கு 1:35.

நான் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஆரம்ப நாட்களில், ஒரு தேவ மனிதர் எனக்கு இவ்விதமாக ஆலோசனை எழுதினார்:

Getup early in the morning and spend two hours in prayer, you will see the difference in your life.

நீங்கள் அதிகாலையில் எழுந்து வேதம் வாசித்து, தியானியுங்கள். ஒரு மணி நேரமாவது ஜெபியுங்கள்.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் சங்.1:2.

BLESSED is the man என்று சங்கீதம் 1:1 ஆங்கிலத்தில் ஆரம்பிக்கிறது.

2. மத்தியான ஜெபம்

தாவீது: அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார் சங்.55:17.

தானியேல்: தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, ***தினம் மூன்று வேளையும்*** தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான் தானி.6:10.

வருகையின் தூதன் அலுவலகத்தில் சுமார் 50 வருடங்கள், பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை ஜெபம் நடைபெறுகிறது.

3. இரவு ஜெபம்

அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, ***இராமுழுவதும்*** தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் லூக்கா 6:12.

மாத பத்திரிகை நடத்துகிற ஒரு சகோதரனைஅநேக வருடங்களாக நான் அறிவேன், அவர் ஆரம்ப நாட்களில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில், பசி பட்டினியோடு ஊழியம் செய்து வந்தார். ஆனால் அவர் ஒரு சிறந்த ஜெபவீரர். இராமுழுவதும் ஜெபிப்பதைக் குறித்து அவர் பத்திரிகையில் எழுதினதை அப்படியே வாசகருக்கு தெரிவிக்கிறேன்: "இரவு 8.00 மணிக்கு காட்டுப் பகுதிக்கு ஜெபம் பண்ண செல்வேன், ஜெபம் பண்ணி முடிந்து வீட்டுக்கு திரும்பும் போது, பெண்கள் முற்றத்தைப் பெருக்கி தண்ணீர்தெளித்துக்கொண்டிருப்பார்கள்".

எனது தகப்பனார் காலஞ்சென்ற பாஸ்டர் **S.தேவதாசன்** (முன்னாள் வருகையின் தூதன் ஆசிரியர்) இரவு முழுவதும் அடிக்கடி ஜெபிப்பதை நான் அறிவேன். இரவு 10.00 மணிக்கு ஒரு கப் காபி குடித்துக் கொண்டு காலை 4.00 மணி வரை அவர்கள் ஜெபிப்பார்கள்.

அநேக ஆண்டுகள் நான் இணைந்து ஊழியம் செய்த ஒரு சகோதரன், தினமும் இரவு 12.00 மணி முதல் 1.00 மணி வரை ஜெபிப்பார். அதைக் குறித்து அவர் தன்னுடைய வாயினால் இவ்வாறு கூறினார்: இரவு 12.00 மணிக்கு ஜெபிப்பேன், ½ அடிக்கிறதைக் கேட்பேன், 1 அடிக்கிறதை கேட்பேன். (பழைய சுவர் கடிகாரத்தில் ½ மணிநேரத்திற்கு ஒரு முறை கடிகாரம் அடிக்கும்)

பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைப் பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா? என்றார் மத்.26:40.

நீங்கள் ஒரு மணி நேரமாவது இயேசுவைப் போல விழித்திருக்கக் கூடாதா?

4. சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்

நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் மத்.26:41.

நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது:

எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் மத்.6:9-13.

5. மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக ஜெபம்

ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப் படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார் லூக்கா 21:36.

6. தேவனுடைய பிரசன்னத்தில் ஜெபம்

இந்த வார்த்தைகளை அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளான பின்பு, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக் கொண்டு, ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார்.

அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது லூக்கா 9:28,29.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள்.

ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள் லூக்கா 2:36,37.

PRAYER is entering into the presence of God.

PRAYER is enjoying the presence of God.

PRAYER is spending time with the LORD

7. வேதனையோடு ஜெபம்

1. மத்.26:37 பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டு போய், ***துக்கமடையவும் வியாகுலப்படவும்*** தொடங்கினார்.

2. மத்.26:38,39 அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடே கூட விழித்திருங்கள் என்று சொல்லி,

சற்று அப்புறம் போய், ***முகங்குப்புற விழுந்து:*** ... ஜெபம் பண்ணினார்.

3. மத்.26:39 ... என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் ***என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது*** என்று ஜெபம் பண்ணினார்.

4. லூக்கா 22:44 ***அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்.***

5. லூக்கா 22:44 ***அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.***

இது மூன்று சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை, லூக்கா மட்டுமே இதைத் தெரிவிக்கிறார். காரணம் அவர் ஒரு மருத்துவர். இரத்த வேர்வையை ***ஹெமாட்டோஹைட்ரோசிஸ்*** (Hematohidrosis) என்று மருத்துவர்கள் அழைக்கின்றனர்.

6. எபிரேயர் 5:7 அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, ***பலத்த சத்தத்தோடும்,***

7. எபிரேயர் 5:7 ***கண்ணீரோடும்*** விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப்போகும் அழிவை பார்த்தபோது, அவர் நகரத்திற்காய் அழுதார். நம்மில் சிலர் ஜெபிப்பதின் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நம் நாட்டின் மீது வரும் தேவனின் தண்டனை தள்ளி வைக்கப்படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய்தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக் குண்டா?

1. கெத்சமனே பூங்காவினில்
   கதறி அழும் ஓசை
   எத்திசையும் தொனிக்கின்றதே
   எங்கள் மனம் திகைக்கின்றதே
   கண்கள் கலங்கிடுதே

   கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
   கண்கள் கலங்கிடுதே
   கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்
   நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

2. சிலுவையில் வாட்டி வதைத்தனரோ
   உம்மை செந்நிறம் ஆக்கினாரோ
   அப்போதும் அவர்காய் வேண்டினீரோ
   அன்போடு அவர்களை கண்டிரன்றோ
   அப்பா உம் அன்பு பெரிதே

3. எம்மையும் உம்மைப் போல் மாற்றிடவே
   உம் ஜீவன் தந்தீரன்றோ
   எங்களை தரை மட்டும் தாழ்த்துகின்றோம்
   தந்து விட்டோம் அன்பின் கரங்களிலே
   ஏற்று என்றும் நடத்தும்

Are you praying like JESUS

நீங்கள் இயேசுவைப் போல ஜெபிக்கிறீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
அலுவலகம் : **95432 21008** **வெஸ்லி தேவதாசன்**
உதவி : **94897 40295** (WESLEY DEVADASON)

இதோ இந்த மனுஷன்!

Behold the man

By James Smith (1802 - 1862)

போர்ச் சேவகர் இயேசுவை வாரினால் அடித்து, முள் முடியைச் சூட்டி, பழைய சிவப்பு அங்கியைத் தரித்து, கையினால் அவரை அடித்து கொடுமைப்படுத்தினார்கள். இப்போது பிலாத்து அவரை ஜனங்களுக்கு முன்பாக நிறுத்தி, "***இதோ இந்த மனுஷன்***" *(யோவான் 19:5)* என்கிறான்.

அவரது வாழ்வு முழுவதிலும் அவர் பரிசுத்தராகவும், தீட்டுப்படாத வராகவும், இரக்கம் நிறைந்தவராகவும், நன்மை செய்கிறவராகவும் சுற்றி நடந்தார். ஆனால் அவர் பாவத்தைக் கண்டித்ததாலும் தேவனுடைய நீதியை அனுமதிக்கக் கேட்டபடியினாலும் அவர் வெறுக்கப்பட்டு, பாடுபடுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டார்.

நாம் இந்த மனிதரைப் பார்ப்போம்! மனித குலத்தினை அலங்கரிக்கக் கூடிய அனைத்து நற்கிரியைகளையும் அவர் செய்தார். அவரது சாந்தம், நற்குணம், பொறுமை, விசுவாசம், தயவு, தேவன் மேலும் மனிதர் மேலு முள்ள பூரண அன்பு இவற்றைப் பாருங்கள்! அழகிய குணாதிசயம்! பரிபூரண பரிசுத்த வாழ்வு! இதோ அவரை இதயபூர்வமாக ஆராதியுங்கள்! அவரை முழுமையாக நம்புங்கள். எனது ஆத்துமாவே இதோ இந்த மனுஷன்!

துக்கம் நிறைந்த அவருடைய முகத்தைப் பாருங்கள். அடிக்கப்பட்ட அவரது உடல், நொறுங்கிய இருதயம், நெற்றியில் வடியும் குருதி, இவை யெல்லாவற்றையும் எனக்காகவும் உங்களுக்காகவும் அவர் சகித்தார்.

அவரைப் பாருங்கள், அவரது அன்பை சந்தேகிக்க வேண்டாம். அவரது சத்தியத்தைக் குறித்து கேள்வி கேட்க வேண்டாம். உங்கள் சத்துருக்களுக்குப் பயப்பட வேண்டாம். பரம தந்தையின் கோபத்திற்கும் பயப்பட வேண்டாம்!

இதோ அவரைப் பாருங்கள், அவர் தேவனுடைய அன்பின் நிரூபணம் செய்யப்பட்ட அனைத்து வாக்குத்தத்தங்களின் உறுதி, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நம்பிக்கை.

அவரைப் பாருங்கள். அவரோடு மனதுருகுங்கள். குத்தப்பட்ட அவரை நோக்கிப் பாருங்கள். "அவருக்காக புலம்புங்கள்"

இதோ அவரைப் பாருங்கள். உங்களைப் புதிதாக அவரிடம் கொடுங்கள். உங்கள் மாம்சத்தையும் அதன் இச்சைகளையும் குருசில் அறையுங்கள். உங்கள் இருதயத்தில் ஆழமான அழுத்தங்கள் ஏற்படுவதுவரையிலும் அவரைப் பாருங்கள். பாவத்தின் மேலுள்ள ஆசை விலகுமட்டும் அவரைப் பாருங்கள்.

முறுமுறுக்கவும், பராது சொல்லவும், சோதிக்கப்படும் பொழுது அல்லது தெய்வீக அருளின் நிர்வாகத்தில் மனதார அவரை நோக்கிப் பாருங்கள்.

சாத்தானோ, உலகக் கவர்ச்சிகளோ உங்களைப் பாவம் செய்யவோ. தேவனை விட்டு விலக்கவோ செய்யும் போது அவரை நோக்குங்கள்.

மரணம் உங்களை நெருக்கி, கல்லறை உங்களுக்கு ஆயத்தமாகும் போதும் அவரை நோக்கிப் பாருங்கள்.

இதோ இந்த மனுஷன்!

அவரை நோக்கிப் பார்த்து அதிகமாக நேசித்து அவரை போல நடக்கப் பிரயாசப்படுங்கள். அவரை நோக்கிப் பார்த்து இன்னும் அதிகமாக அவரை சேவியுங்கள். துக்கம் நிறைந்து பாடு அனுபவிக்கிற அவர் அனுதினமும் நம் கண்களுக்கு முன்பாக இருக்கட்டும்.

அவர் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வருவதையும் நான் பார்க்கட்டும். அவரது முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் எவ்வளவு வேறுபாடு!

அவரது சிலுவை - சிங்காசனம்

முள் கிரீடம் - மகிமையின் கிரீடம்

பிலாத்து மற்றும் யூத ரபிகளுக்கு முன்பாக - பரலோக சேனையும் பரிசுத்த வான்களும் புடை சூழ

"இதோ இந்த மனுஷன்"

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்து தம்மை தமது ஜனங்களுக்கு அவர்களுக்குத் தேவையான எல்லாக் காரியங்களுக்காகவும் மட்டுமல்ல அவர்களை சந்தோஷப்படுத்துவதற்கான எல்லாவற்றையும் கொடுக்கிறார். "அதிலே கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை, விருத்தசேதனம் உள்ளவனென்றும் விருத்தசேதனம் இல்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார்" கொலோ.3:11. அவர் மனித அவதாரம் எடுக்கும் தேவை ஏற்பட்ட போது அவர் அதை மறுக்கவில்லை. அவர் மனிதனாக ஒரு அடிமை ரூபத்தில் தோன்றினார். அவர் கொல்லப்படும் வேளை வந்த போது அவர் அதை மறுக்கவில்லை. அவர் தம்மை நமக்காக சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார்.

இங்கு அவரை நாம் புகழ்ந்து போற்ற வேண்டிய அன்பைக் காண்கிறோம். இதில் நாம் மகிழ்ந்து களி கூரவும் நித்தியகால மகிமையை அடையவும் கூடியதாயிருக்கிறது.

❖ ❖ ❖

(ஜோனத்தான் எட்வர்ட்ஸ் அமெரிக்காவின் தலை சிறந்த இறையியலாளர். அவர் 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மிகப்பெரிய விழிப்புணர்வில் எழுப்புதல் பேச்சாளராக திறம்பட செயல்பட்டவர்.)

அதோனிராம் ஜட்சனும் ஆன் ஜட்சனும் -பகுதி 2

பர்மா சென்ற மிஷனெறிகள்

Adoniram and Ann Judson (Part 2) - Missionaries to Burma

T.W. Engstrom

1811-ம் ஆண்டில் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு புதிதாக உருவாக்கப்பட்ட அமெரிக்க மிஷனெறிக் குழு பர்மாவில் ஒரு மிஷனெறி களம் ஸ்தாபிக்க தீர்மானித்தது. இந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களில் ஒருவர் **அதோனிராம் ஜட்சன்**. இந்த நியமனத்திற்குப் பின்னர் சிறிது காலத்துக்குள் **ஆன் ஹாஸல்டைன்** என்ற பெண்மணியோடு திருமணம் நிச்சயமாயிற்று. அவர் வெளிப்படையாக ஆனிடம் தமது மனைவியாக, வீடு, நண்பர்கள் இவற்றை இழக்க வேண்டியதும், களைப்பு, தனிமை ஒருவேளை மரணம் போன்றவற்றை ஏற்கவும் வேண்டியதாயிருக்கும் என்று கூறிவிட்டார். அனேக தோல்விகளையும், கஷ்டங்களையும் கூட பகிர்ந்து கொள்ள வேண்டியதாயிருக்கும் என்றும் கூறினார்.

அதோனிராமின் (Proposal) திருமண கோரிக்கை மட்டுமல்ல தேவனுடைய அழைப்பையும் ஏற்றுக்கொண்டு **ஆன் ஹாஸல்டைன்** (*நான்சி*) முதல் பெண் அமெரிக்க மிஷனெறியானார். அவர்களது வாழ்க்கை, சோதனைகள், தீரச் செயல்கள், பிரயாணங்கள், சகிப்புகள் மற்றும் யாவும் கர்த்தருடைய அற்புதமான கிருபையின் சாட்சியுமாயிருந்தது. ஆனுடைய தோழிகள் அவள் மிஷனெறிப் பணிக்காகப் போவதை உணர்ந்த போது எல்லா விதங்களிலும் அவளை அதைரியப்படுத்த முயற்சித்தனர். அவளுடைய திட்டங்கள் எல்லாம் முரடானவை என்றும் வெறும் கற்பனை என்றும் கூறினர். ஆனால் அவள் தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படிய தீர்மானமாயிருந்தாள். தனது வாழ்வில் அயல்நாட்டிற்குச் சென்ற முதல் மிஷனெறி என்ற சிறப்புப் பெயரையும் பெற்றாள். பர்மியர்கள் மத்தியில் மிஷனெறியாகச் செல்ல விருக்கும் திருமதி **ஜட்சன்** இவ்வாறு எழுதினார்கள்: "நான் எனது வாழ்நாள் முழுவதையும் ஒரு ஆத்துமாவை ஆதாயம் செய்தால் கூட அதைத் தகுதியென எண்ணுகிறேன். எனது நாட்களை புறதேசத்து மக்களோடு செலவு செய்து அவர்களில் விழிப்புணர்வைக் கொண்டு வரவும் அவர்களுக்கு சேவை செய்யவும் விரும்புகிறேன். இந்தக் காரியத்தில் நான் அதிக மகிழ்ச்சி காண்கிறேன்".

1812 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் **அதோனிராம் ஜட்சன்** வாழ்வில் நினைவு கூரப்படக்கூடிய ஒன்றாகும். மூன்றாம் தேதி தனது பெற்றோரிடம் விடை பெற்றார். ஐந்தாம் தேதி அவர் **ஆன் ஹாஸெல்டைனை** திருமணம் செய்தார். ஆறாம் தேதி அபிஷேகிக்கப்பட்டார். பதினெட்டாம் தேதி அவரும் மனைவியும் இந்தியாவுக்குப் பிரயாணம் புறப்பட்டனர். அதோனிராமுடைய இளைய சகோதரரான Elnathan கப்பல் வரை உடன் வந்தார். இச்சமயம் வரை Elnathan தனது வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த தில்லை. அவர்கள் பிரியும் வேளையில் அதோனிராம் தனது சகோதரரிடம் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். வண்டி துறைமுகத்தை விட்டுப் புறப்படுமுன் Elnathan தனது வாழ்வை தேவனுடைய கரிசனைக்கும் பாதுகாவலுக்கும் ஒப்புக் கொடுத்தார்.

முதல் நிறுத்தம் இந்தியா

இந்தப் புதிய மிஷனெறிகள் நான்கு நீண்ட மாதங்களை கடலில் கழித்தனர். பின்பு 1812 ஜூன் 18-ல் கல்கத்தாவில் இறங்கினர். அவர்களை வில்லியம் கேரி என்ற மதிப்பிற்குரிய மிஷனெறியின் மகன் ஃபெலிக்ஸ் கேரி வரவேற்றார். அப்போது மிஷனெறிப் பணி ஏறக்குறைய ஒரு முடிவுக்கு வந்திருந்தது. ஏனெனில் கிழக்கிந்தியக் கம்பெனி அதன் அனைத்து சுவிசேஷப் பணிகளிலும் இந்தியாவில் எதிர்க்கப்பட்டது. அவர்கள் இறங்கிய தற்கு பத்து நாட்களுக்குப்பின் நாடு கடத்தும் தீர்மானம் அவர்களுக்கு வாசிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் அமெரிக்கா திரும்ப வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆனால் ஆனுக்கும் ஜட்சனுக்கும் இந்தியப் பெரும் தேசத்திற்கு ஒரு நோக்கத்தோடு தேவன்தான் அழைத்திருந்தார் என்று தெரியும். எனவே ஜெபத்தின் மூலம் தேவனிடம் பதிலைத் தேடினர். தேவன் ஆச்சரியமாக வாசல்களைத் திறந்து, ஐல் டி பிரான்ஸ் (Isle of France) (தற்போது மொரிஷியஸ்) என்ற தீவுக்குத் தப்பியோட வழி செய்தார். அங்கு சில காலம் அவர்கள் பாப்திஸ்து மிஷன் வீட்டில் தங்கியிருந்தனர்.

சிறிது காலத்தில் அமெரிக்கன் மிஷன்களின் குழுவின் உடன் ஸ்தாபகராக இருந்த லூதர் றைஸ் என்பவர் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்தார். அங்கு அவர் பாப்திஸ்து சபைகளை உயிர்ப்பிக்க விருப்பம் கொண்டார். அதன் பயனாக பாப்திஸ்து பொதுவான கன்வென்ஷன் உருவாக்கப்பட்டது. அவற்றில் முதல் திட்டம் ஜட்சனையும் மனைவியையும் மிஷனெறிகளாக ஏற்றுக் கொள்வதாயிருந்தது. தேவன் இன்னொரு வாசலையும் திறந்து ஒரு மிகப்பெரிய கஷ்டத்தை விலக்கினார்.

இறுதியாக பர்மாவில்

ஜட்ஸன் தம்பதிகள் ரங்கூனில் குடியிருக்க ஆர்வமாயிருந்தனர். ஆனால் கீழ் பர்மா மிஷனெறிப் பணிக்கு இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்று எல்லோரும் உறுதியுடன் கூறினர். இவ்விருவரும் வேனிற்காலத்தில் 1813-ல் ரங்கூன் சென்று நதிக்கரையோரத்தை யடைந்து அந்த அழகிய தேசத்தைக் கண்டு மகிழ்ந்தனர். பர்மா ஐசுவரியமும் செழிப்புமான தேசம். சுதேசிகள் நெல், பழங்கள் மற்றும் தேக்குமரங்களை மிகுதியாகப் பயிரிட்டனர். மேலும் பூமியிலிருந்து விலையேறப்பெற்ற கற்கள், வெள்ளி, தங்கம் மற்றும் செம்பு ஆகியவைகளும் கிடைத்தன.

ஜட்சன் தம்பதியர் அங்கு சென்ற போது ஒரு சுதேசி கிறிஸ்தவர்களும் அங்கு கிடையாது. அவர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றதில்லை. தங்கள் பணியின் தீவிரத்தை உணர்ந்த தம்பதிகள் புதிய பாஷையைக் கற்றுக் கொள்ள முயற்சி எடுத்தனர். ஜட்சன் ஒரு சுதேச ஆசிரியர் மூலம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து சில வாரங்களுக்குள் இருவரும் அம்மக்களுடன் சம்பாஷிக்கும் திறமை பெற்றுக்கொண்டனர். மொழியை எளிதில் கற்றுக்கொள்ளும் திறமையால் கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையை சுதேசிகளுக்கு எளிதாக எடுத்துக் கூறினர்.

இப்போது சில மாதங்களில் சுதேசிகளின் முழு நம்பிக்கையையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர். இந்த பர்மியர்கள் வெள்ளை நிற அயல் நாட்டினர் கூறியதை கூர்ந்து கவனித்தனர். அவர்கள் கடல் கடந்து ஒரு புதிய நல்ல மார்க்கத்தினை போதித்தது திகைப்பை அளித்தது. ஆனால் வெளிப்படையாக தங்கள் இருதயத்தையும் வாழ்வையும் கிறிஸ்துவுக்கு அளிக்க பல வருடங்கள் ஆயின. அவர்கள் ஜட்சன் தம்பதிகள் கூறியதை மிக உன்னிப்பாக கவனித்தாலும் அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. "எங்கள் மார்க்கம் எங்களுக்கு நல்லது, உங்கள் மார்க்கம் உங்களுக்கு நல்லது" என்று சொல்லி விடுவார்கள். ஒரு கடினமான உழைப்புக்குள் இந்த மிஷனெறிகள் இருந்தனர். பர்மியர்களின் நிர்விசாரம் அதைரியப்படுத்துவதாக இருந்தாலும், ஒரு வருடத்திற்கு மேலாகியும் ஒருவரும் மனந்திரும்பாத நிலையில் அவர்கள் அதைரியப்படவில்லை. அவர்கள் தரைத்தள வேலையை செய்வதாகவும்,

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறுவடையை ஏற்றகாலத்திலே தேவன் அளிப்பார் என்றும் அவர்கள் உணர்ந் தார்கள். இந்த அஸ்திபார பணிக்கு விசுவாசமும், விடாமுயற்சியும்உறுதியும் அவசியம் என்று அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருந்தனர்.

சோதனைகளும் தேவனுடைய ஒத்தாசையும்

பர்மாவில் ஆறுமாதங்கள் தங்கிக் கற்றுக் கொண்டபின் ஆன் ஜட்சன் பலவீனப்பட்டு மருத்துவ உதவிக்காக சென்னை செல்ல வேண்டியதாயிற்று. மூன்று மாதங்கள் அங்கு தங்கி சிறிது சுகம் பெற்றாள். ஜட்சன் அதிகமான குழப்பங் களையும் கஷ்டங்களையும் சகிக்க வேண்டியதாயிருந்தது. துக்கத்தைத் தொடர்ந்து துக்கம் அவரை வாட்டியது. 1816-ம் ஆண்டு அவர்களது எட்டு மாதங் களான மூத்த மகன் மரித்துப் போனான். 1817-ம் ஆண்டில் அவரது ஆரோக்கியம் குறைந்ததால் ரங்கூனை விட்டு ஒரு கடல் யாத்திரை செய்ய வேண்டியதாயிற்று. ஆறு மாதங்கள் மனைவியுடன் தொடர்பு கொள்ள முடியாமற் போய்விட்டது. இக்கால கட்டத்தில் மனைவியும் துன்பங்களில் செலவிட வேண்டிய தாயிற்று.

மூன்று வருடங்கள் கடின உழைப் புக்குப் பின்பும் எந்த பலனுமில்லாத நிலையில் இரு புதிய மிஷனெறிகள் அவர்களோடு இணைந்து கொண்டனர். அந்த Hough தம்பதிகள் வில்லியம் கேரி யால் நன்கொடையாக அளிக்கப்பட்ட அச்சகத்தைக் கொண்டு வந்தனர். அது பர்மிய அச்செழுத்துக்களை உடைய முழுமையான அச்சகம். இதை பர்மியர்கள் 'Written Doctrine' என்று மூட நம்பிக்கையுடன் அதை கனப்படுத்தினர். எனவே ஜட்சன் இதன் மூலமாக அவர்களுக்குப் போதிக்க விரும்பினார். இந்த நல்ல தருணத்தில் அச்சகம் வந்ததற்காக அவர் நன்றி செலுத்தினார். Mr.Hough அச்சிடும் திறமை பெற்றவர். எனவே இரு மிஷனெறிகளும் சேர்ந்து திரளாக பிரசுரங்களையும் வேத பகுதிகளையும் அச்சிட்டு வினியோகித் தனர். முதலாவது அவர்கள் அச்சிட்ட துண்டு பிரதியின் தலைப்பு "**கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒரு பார்வை**" என்பதாகும். தொடர்ந்து மத்தேயு சுவிசேஷம் பர்மிய மொழியில் ஜட்சனால் மொழியாக்கம் செய்யப்பட்டது.

1819 ஜூன் 17-ல் ஜட்சன் தம்பதிகள் களத்தில் வந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின் முதல் மனந்திரும்பிய பர்மியருக்கு ஜட்சன் ஞானஸ்நானம் கொடுத்தார். ஒரு வாரத்திற்குப் பின்னால் தமது பத்திரி கையில்: "ஒரு மனந்திரும்பிய பர்மியரோடு முதல் முதலாக கர்த்தருடைய பந்தியில் உட்காரும் மகிழ்ச்சியைப் பெற்றோன். இது எனது வாய்ப்பு - பல வருடங்களாக நான் எதிர்பார்த்த வாய்ப்பு - நான் கர்த்தருடைய பந்தியை இரு மொழிகளில் ஆசரிக்கிறோன்" என்று எழுதினார்.

(தொடரும்)

சிலுவையைக் குறித்துப் பிரசங்கிப்பது "**சபையில் எழுப்புதல் ஏற்படவும், சபை மூலம் சுவிசேஷம் பரம்பவும், சபையின் பயிற்சிக்கும்**" தேவனுடைய திருவு கோலாயிருக்கிறது.

"உங்கள் கண்களை ஏறெடுத்து வயல் நிலங்களைப் பாருங்கள்"

"Lift up your eyes and look on the fields"

Lois J.Stucky (1928 - 2014)

ஒரு நாள் ஆண்டவராகிய இயேசு தமது பிரயாணத்தில் களைப்படைந்த வராய் சீகாருக்கு வெளியே கிணற் றண்டையில் உட்கார்ந்திருந்தார். சீஷர்கள் நகரத்திலிருந்து உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து போஜனம் பண்ணும்படி அவரை வருந்திக் கேட் டார்கள். அவர் போஜனம் பண்ணுவதில் விருப்பமில்லாதவராக இருந்ததை அவர்கள் புரிந்து கொள்ளாமலிருந்த போது அவர் அவர்களிடம்: "...நான் புசிக்கிறதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்". "...நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவா.4:32-34) என்றார். பிதாவின் சித்தம் செய்வதும் மக்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பதும் அனுதின போஜனத்தை விட முக்கிய மானதும் நிறைவானதும் என்றும் அவர் கூறினார். பிதாவுக்கும் குமாரனுக்கும் ஆத்தும இரட்சிப்பு எவ்வளவு விலை யேறப்பெற்றது என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா? இரட்சிப்பின் செய்தியை கேட்க ஆயத்தமுள்ளவர்களுக்கு அதைக் கூற இயேசு எப்போதும் ஆயத்தமா யிருந்தார். அவர் எப்போதும் நித்தியத்தின் பலன்களில் நோக்கமாயிருந்தார்.

ஆண்டவராகிய இயேசு சீஷரிடம் கண்களை ஏறெடுத்து ஆத்தும அறுவடை ஆயத்தமாயிருப்பதால் அதை சேர்க்க வேண்டுமென்று கூறினார் (யோவா.4:35). நமது எஜமானுடைய வாயிலிருந்து வரும் இந்த வார்த்தைகள் கட்டளை யல்ல புத்திமதிகளாக கிறிஸ்தவர் களாகிய நமக்கு இன்றும் கூறப்படு கிறது. இந்த நோக்கத்தை இழக்க வேண்டாம்.

நீங்கள் ஒவ்வொருவரும் வாய்ப்பு களை அனுபவங்களாக மாற்றுவதற்காக சந்தோஷப்பட்டு தேவனைத் துதிக் கிறேன். நீங்கள் உலக அறுவடைக்காக சாட்சியாகவும், ஜெபிக்கிறவர்களாகவும், கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறீர்கள். ஆனால் நம்மில் சிலர் இவ்வாறு கேட்க வேண்டும்: எதற்காக எனது கண்கள் ஏறெடுக்கப்பட வேண்டும்? எனது கண்கள் எனது முக்கியத்துவங்கள், சந்தோஷங்கள், வெற்றி அல்லது செழிப் பான வாழ்வின் மீது அல்லது எனது காட்சிகளின் மீது இருக்கிறதா? நிச்சய மாக இவ்வுலகில் நாம் கவனம் செலுத்த வேண்டிய காரியங்களுண்டு. ஆனால் தேவ அன்பு நமது இருதயங்களை ஆண்டு கொள்வதால் நாம் நம்மைச் சுற்றிலும், தூர நாடுகளிலும்கூட முதிர்ச்சி அடைந்த ஆத்துமாக்களின் அறுவடைக்காக ஆயத்த மாகி உத்தம அறுவடையாளர்களா யிருக்க வேண்டும்.

ஆண்டவர் மீண்டும் தமது சீஷர்கள் ஆத்தும ஆதாயம் செய்ய இவ்வாறு உற்சாகப்படுத்தினார்: "விதைக்கிறவனும் அறுக்கிற வனுமாகிய இருவரும் ஒருமித்து சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி நித்திய ஜீவனுக்காக பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்" (யோவா.4:36). தேவனோடு இணைந்து ஒரு பணியாள னாக இருப்பதைவிட மேலானது எது? அது நித்தியத்தில் நமக்கு பலனை அளிக்கக் கூடியது. நாம் விரும்பினால் இந்தப் பங்கைப் பெறலாம்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய மிகச் சிறந்த ஈவு

Jesus Christ God's Excellent gift

Johann Arndt (1555-1621)

கிறிஸ்து உங்களைச் சுகப்படுத்த உங்கள் ஆத்துமாவுக்கு உண்மையான மருந்து, உங்களுக்குப் புத்துணர்வு தர மாம்ச உணவும் பானமும், உங்கள் தாகத்தைத் தீர்க்க ஜீவநீரூற்று, அந்த காரத்தில் ஒளி, துக்கத்தில் சந்தோஷம், உங்களை நிந்திக்கிறவர்கள் மத்தியில் உங்களுக்காக வழக்காடுபவர்,- உங்கள் தவறுகளில் ஞானம், - பாவங்களுக்கு எதிராக நீதி, தகுதியின்மைக்கு எதிராக சுத்திகரிப்பு, அடிமைத்தனத்திற்கு எதிராக மீட்பு, நியாயாசனத்துக்கு எதிராக இரக்காசனம், கண்டனத்திற்கு எதிராக கிருபையின் ஆசனம், அனைத்து எதிரி களுக்கு எதிராக வெற்றி, துன்பப்படுத்து கிறவர்களுக்கு எதிராக தலைவன், உங்கள் ஆத்தும மணவாளன், உங்கள் பலவீனத் தில் பெலன், அலைச்சல்களில் வழி, பொய்களுக்கு எதிராக சத்தியம், மரணத் துக்கு எதிராக ஜீவன். அவரே உங்கள் ஆலோசனை, பெலவீனங்களின் மத்தி யில் பெலன், நித்திய பிதா, எதிரிகளுக்கு எதிராக சமாதான பிரபு, கடன்களில் உங்கள் உதவித்தொகை, நிந்தைகளுக்கு எதிராக மகிமையின் கிரீடம், அறிவீனத் தில் ஆசிரியர், ஒடுக்குகிறவர்களுக்கு எதிராக நீதிபதி,- சாத்தானுடைய அரசை அழிக்கும் அரசர்,- நித்தியமான மகாப் பிரதான ஆசாரியராயிருந்து பரிந்து பேசுகிறவர்.

கிறிஸ்தவனே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்கு ஒரு மிகச் சிறந்த ஈவு. பரலோக நன்மைகளைப் பெற்று பயன்படுத்த அனுதினமும் ஜெபித்து வேண்டுதல் செய்யுங்கள். கிறிஸ்துவின் பணியை நன்கு நிறை வேற்றுங்கள். கிறிஸ்துவாகிய மீட்பர் மூலம் பெற்ற அளவற்ற நன்மைகளுக் காக நன்றி சொல்வோம்.

கிறிஸ்துவின் அன்பு இனிமையும் திருப்தி தருவதுமாகும். இது மகாப் பெரியது. அது மரிக்கும் அன்பு. இத்தகைய அன்பை இதுவரை எவரும் கண்டதில்லை. இதனை எந்த அன்போடும் ஒப்பிட முடியாது.

சிலுவையின் வார்த்தை

The word of the Cross

Al Whittinghill

உலகத் தோற்றத்திற்கு முன்பாகவே தேவனுடைய இருதயத்தில், இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறவராக இவ்வுலகில் வருவது தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அவர் தியாகமுள்ள அன்பினாலே தம்மை அர்ப்பணித்து விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை விலைக் கிரயமாக வாங்குவதால் அவர்கள் அவருடைய சொந்தப் பிள்ளைகள் ஆகிவிடுகிறார்கள். தேவனுடைய நித்திய திட்டத்தின்படி மனிதன் பாவம் செய்வதற்கு முன்பாகவே தேவனுடைய இருதயத்தில் சிலுவை இருந்தது.

காலம் வந்த போது ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பிலிருந்து மல்கியாவின் புத்தகம் வரை மிகத்தெளிவாக தேவ வசனம் தேவன் இந்த பூமிக்கு பழுதற்ற ஆட்டுக்குட்டியாக வந்து நமது பாவங்களுக்காக சிலுவையில் மரிப்பார் என்பதை வெளிப்படுத்துகின்றன. மகிமை நிறைந்த சிலுவையே! பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டவை எல்லாம் அவர் வருகையைத் தெளிவாக அறிவித்தன. அதனை யாரும் மறுக்க முடியாது. அவரது வருகை 'தமது ஜீவனை அனேகரை மீட்கும்படியாக பலியாகக் கொடுப்பார்' என்பதைக் குறித்துக் கூறின. அனைத்துக் காணிக்கைகளும், பண்டிகைகளும், ஆசரிப்புகளும் யாவும் வரப்போகிற இயேசுவைக் குறித்தன. இயேசு என்றால் தமது சொந்த ஜனங்களை பாவத்திலிருந்து இரட்சிப்பவர் என்று பொருள். வேதபுத்தகம் சொல்லுகிறபடி அனைத்து தீர்க்கதரிசிகளும் அவர் பாடுபடுவதற்காக வரப் போவதாக முன்னதாகவே கூறப்பட்டுள்ளது. இயேசு தாமே லூக்கா 24-ம் அதிகாரத்தில் பழைய ஏற்பாடு முழுவதும் அவரைப் பற்றியே எழுதப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார். விசுவாசிக்கிறவர்கள் அவரை தீர்க்கதரிசனங்களாலும் வாக்குத்தத்தங்களாலும் ஆரம்ப காலம் முதல் ஏற்படுத்தப்பட்ட இரட்சகர் என்று அவரை உணர்ந்து ஆராதிப்பார்கள்.

மத்திப நிகழ்வு

இயேசு சிலுவையில் மரித்த போது அதனால் பிதா மகிமைப்பட்டதோடு மனித இரட்சிப்பும் சம்பாதிக்கப்பட்டு, காலத்திற்கும் நூற்றாண்டிற்கும் மத்திப நிகழ்வாயிற்று. சிலுவையில் தேவன் தமது குணாதிசயத்தையும் தம்மையுமே வெளிப்படுத்திவிட்டார். பாவம் முற்றிலும் பரிகரிக்கப்பட்டுவிட்டது. நித்திய பரிசுத்தம் திருப்திப்படுத்தப்பட்டது. அன்பு வெளிப்படுத்தப்பட்டது. சாத்தான் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டான். விசுவாசிக்கிறவர்களுக்கு இரட்சிப்பு உறுதியாக்கப்பட்டுவிட்டது. இதனால் தான் **'சிலுவையின் வார்த்தை'** (1கொரி.1:18) செய்தியாக புதிய ஏற்பாட்டில் 'சுவிசேஷமாக' நற்செய்தியாக நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது. வேத வாக்கியங்களிலெல்லாம் கூறி அறிவிக்கப்பட்ட செய்திகளின் ஆத்துமாவாக இருக்கிறது. பிதாவாகிய தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பிய போது, இயேசுவானவர் சிலுவையில் மரித்ததால் அவரது பணியை முற்றிலும் நிறைவேற்றிவிட்டார் என்பதற்கு சான்றாகிவிட்டது. பரலோகத்தில் இது முடிவுற்ற பணி. இப்போது சிங்காசனத்தைச் சூழ நிற்கும் ஒளியிலுள்ள பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த தேவ ஆட்டுக்குட்டியை ஆராதிக்கிறார்கள். அகிலாண்டத்திலுள்ள விழிப்புணர்வு பெற்ற மக்கள் ஆச்சரியத்தோடும் பிரமிப்போடும் நன்றியோடும் 'அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை' பற்றிப்பாடி கல்வாரியில் பாவ நிவாரணம் நிறைவேற்றப்பட்டதை புகழ்ந்து பாடுகிறார்கள். விரைவில் எல்லோரும் அவரைத் தொழுது சேவிப்பார்கள். எல்லாக் காலங்களிலுமுள்ள பரிசுத்த வான்கள் சிங்காசனத்தைச் சூழநின்று அவரை வணங்குவார்கள்.

காலங்களுக்கு முன்னே, இக்காலத்திலும், வரும் காலங்களிலும் இயேசுவின் சிலுவை மரணம் மேம்பட்டு நிற்கிறது. தேவ வசனம் 'சிலுவையின் வார்த்தையை' பிரசங்கிப்பதுதான் இரட்சிப்புக்குக் காரணமாயிருக்கிறது எனத் தெளிவாகச் சொல்லுகிறது. இயேசு யார் என்பதை கல்வாரியின் மூலமாக அவர் எந்த மகிமையான காரியத்தைச் செய்து நமது வாழ்க்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினார் என்ற அற்புதமான நித்திய சத்தியங்களை வேதவாக்கியங்கள் திறந்தளிக்கின்றன. நாம் அவருடைய பிறப்பு, மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், நித்திய தேவகுமாரனுடைய கர்த்தத்துவம் ஆகியவற்றை அறிவிக்கிறோம். பிலிப்பியர் 2:5-11 வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் வாழ்கை, நோக்கம் ஆகியவை தேவ வசனத்தின் அபிஷேகிக்கப்பட்ட வல்லமையான பிரசங்கங்கள் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

'சிலுவையின் வார்த்தை' விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் போது அது நம்மை நமது பழைய பாவ வாழ்க்கையிலிருந்து விடுவித்து, தூய தேவன் நம்மில் பிரவேசிக்க வாசலைத் திறந்து நம்மில் பிரவேசித்து அற்புதமான ஒரு உறவை நம்மோடு ஏற்படுத்துகிறார். இந்த மகிமையான சத்தியத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கும் போது அவரது வாழ்வை உத்தம எழுப்புதல் மூலம் அனுபவமாக்கலாம். எல்லாவற்றிற்காகவும் கல்வாரிக்கு நன்றி செலுத்துவோம்!

ஒரு தனிச் செய்தி

பவுல் 1 கொரிந்தியரில் இவ்வாறு தெளிவாகச் சொல்லியிருக்கிறார்: "இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?" 1கொரி.1:20. "சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே (கிறிஸ்து) என்னை அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" 1கொரி.1:17. "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்" 1கொரி.1:23. சிலுவைதான் தனிச் செய்தி. பவுல் சிலுவையின் வார்த்தையை உத்தமமாக அறிவித்தபடியால் ஆண்டவராகிய இயேசுவின் சிலுவையையேயல்லாமல் வேறொன்றிலும் என் நம்பிக்கையை வைக்காதிருப்பேனாக என்கிறார். சிலுவைதான் அவரது மிஷனெறி பணியின் முயற்சிகளிலெல்லாம் உறுதியாகவும் அனுதின வாழ்வின் வாஞ்சையாகவுமிருந்தது.

நாம் ஒவ்வொருவரும் நமது இருதயங்களைப் பரிசோதித்து, நமக்குள் சிலுவையின் வசனத்தை பிரசங்கிக்கவும் அறிவிக்கவும் அசையாத அர்ப்பணத்தைத் தரும்படியாக ஆண்டவரிடம் கேட்போமாக. ஆவிக்குரிய வறுமையும், நிச்சயமற்ற தன்மையும் (1 தெச.2:4) பரவியிருக்கும் இந்தநாட்களில் தேவனால் அழைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியத்தை (எபேசி.3:8) அறிவிக்க தேவனால் அழைக்கப்பட்டது நமது சிலாக்கியம். வரும் நாட்கள் சோதனை நாட்கள். நாம் நமது சொந்த இருதயங்களை அறிந்து கொள்வதோடு தேவனுடைய உத்தமத்தை அவருடைய சிலுவையைக் குறித்து பிரசங்கிப்பதால் எப்படி கனப்படுத்துகிறோம் என்பதையும் அறிந்து கொள்வோம். உலகம் விசுவாசிக்காமலிருந்தாலும் தேவனுடைய திட்டமான அவருடைய குமாரனுடைய ராஜ்யத்தின் மகிமையான நாட்கள் நெருங்குகின்றன.

அநேக ஊழியங்கள் சிலுவையின் செய்தியை மையப்படுத்துவதிலிருந்து விலகிவிட்டன. இது எவ்வளவு துக்கமானது! மக்களிடம் தேவன் அவர்களை நேசிப்பதையும் அதற்காக அவர் ஒரு 'அதிசயமான திட்டத்தை அவர்கள் வாழ்வுக்காக' வைத்திருப்பதையும் அவர்களுக்குச் சொல்ல வேண்டாமா? இல்லாவிட்டால் நாம் உண்மையற்றவர்களாகிவிடுவோம். அந்த மக்கள் நம்பிக்கை இழந்தவர்களாக பாவத்தில் விழுந்து விடுவார்களே! அவர்கள் தங்கள் வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க சிலுவையண்டை வர வேண்டுமே! சபை சிலுவையின் செய்தியைச் சொல்ல வேண்டும். சிலுவையின் செய்தி சொல்லப்படாவிட்டால் சபை வல்லமை இழந்துவிடும்.

இயேசு "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன் என்றார்" யோவா.12:32. அவர் உயர்த்தப்படுவதென்றால் தம்மை ஆராதிப்பதையும் மகிமைப்படுத்துவதையும் குறித்து அவர் கூறவில்லை. தேவ குமாரன் சிலுவையில் மனுக்குலத்தின் பாவத்திற்காகப் பலியாக அறையப்பட்ட செய்தியைப் பிதா அனேகருடைய இருதயங்களை தேவனுக்கு நேராக இழுப்பதற்கு பயன்படுத்துவார் என்பதே.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகளை வாசிக்கிறவர்கள் தங்கள் அர்ப்பணத்தை புதுப்பித்து, 'சிலுவையின் வசனத்தை' அறிவிக்கட்டும். தேவன் கிருபையாக இரங்கி தமது அன்பான சபையை வருகைக்காக ஆயத்தம் செய்யட்டும். சிலுவையைக் குறித்துப் பிரசங்கிப்பது "***சபையில் எழுப்புதல் ஏற்படவும், சபை மூலம் சுவிசேஷம் பரம்பவும், சபையின் பயிற்சிக்கும்***" தேவனுடைய திறவு கோலாயிருக்கிறது. இது தேவபிள்ளைகளுக்கு தூண்டுதலாகவும் வாஞ்சையாகவும் இருப்பதாக.

இயேசுவின் இரத்தத்தின் வல்லமை

The power of the blood of Jesus

Andrew Murray

"...அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" 1பேதுரு 1:18,19.

தமது இரத்தத்தை சிந்தியதுதான் நமது ஆண்டவரின் பாடுகளின் உச்ச நிலையாகும். பரிகாரமான பாடுகளின் விளைவுதான் சிந்தப்பட்ட இரத்தம். இதன் பயன்களைக் குறித்து வேதவாக்கியங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். அவை: இரத்தத்தின் மூலம் ஒப்புரவாக்குதல், இரத்தத்தால் கழுகி சுத்தப்படுத்துதல், இரத்தத்தின் மூலம் பரிசுத்தமாக்குதல், தேவனோடு இணைக்கப்படுதல், சாத்தான் மேல் இரத்தத்தின் மூலம் வெற்றி பெறுதல், இரத்தத்தின் மூலம் ஜீவனைப் பெறுதல் ஆகியனவாகும்.

ஏன் இந்த இரத்தத்தினால் மட்டுமே வல்லமை ஏற்படுகிறது? இந்தக் கேள்விக்குரிய விடை லேவியராகமம் 17:11-ல் காணப்படுகிறது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல், உங்கள் ஆத்துமாக்களுக்காக பாவ நிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவினிமித்தமாகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே". ஜீவன் இரத்தத்தில் இருப்பதாலும் அந்த இரத்தம் பலிபீடத்தில் ஊற்றப்பட்டு பலியாக செலுத்தப்படுவதாலும் அது மீட்கும் வலிமையையுடையது.

ஆத்துமா அல்லது ஜீவன் இரத்தத்தில் இருக்கிறது. எனவே அந்த இரத்தத்தின் மதிப்பு அதிலிருக்கும் ஜீவனுடைய மதிப்போடு தொடர்புடையது.

ஒரு ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் ஜீவன் ஒரு காளையின் ஜீவனை விட மதிப்புக் குறைந்தது. எனவே ஒரு ஆடு அல்லது வெள்ளாட்டின் இரத்தம் பலியாக செலுத்தப்படும் போது அதின் மதிப்பு காளையின் இரத்தத்தை விடக் குறைவான மதிப்புடையது லேவி.4:3, 14, 27-28. மனிதனின் உயிரின் மதிப்பு அனேக ஆடுகளின், மாடுகளின் உயிரை விட அதிக உயர்வானது.

இப்போது யார் இயேசுவின் இரத்தத்தின் வல்லமையைக் கூற முடியும்? அந்த இரத்தத்தில் தூய தேவ குமாரனின் ஆத்துமா இருக்கிறது. தேவனுடைய நித்திய ஜீவன் அந்த இரத்தத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த இரத்தத்தின் வல்லமை மேலானது. இந்த இரத்தத்தில் முழு வல்லமையை வாஞ்சித்து அனுபவிப்பது எவ்வளவு மகிமையானது!

இந்த இரத்தத்தின் வல்லமை எல்லா இரத்தங்களுக்கும் மேலாக இருப்பதால் இது தேவனுக்கு பலிபீடத்தில் செலுத்தப்படுவதால் மீட்பு பெறப்படுகிறது.

நாம் இரத்தம் சிந்தப்படுதலை சிந்திக்கும் போது மரணத்தையும் தொடர்ந்து இரத்தம் முழுவதும் ஊற்றப்பட்டுவிடுவதையும் சிந்திக்கிறோம். மரணம் நமக்கு பாவத்தை நினைவு படுத்துகிறது. ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம். தேவன் இஸ்ரவேலரிடம் பாவ நிவாரணமாக இரத்தத்தை பலிபீடத்தில் செலுத்தும்படி கூறினார். பாவம் செய்தவர்கள் பலியிடப்படும் மிருகத்தின் மீது கரங்களை வைப்பதால் பாவத்தின் தண்டனை அதன் மீது வைக்கப்பட்டு விட்டதாகக் கருதப்பட்டது.

இவ்வாறு இரத்தமாகிய உயிர் கொடுக்கப்படுவதால் தேவ கட்டளை கீழ்ப்படியப்பட்டது. பாவம் முழுவதும் மூடப்பட்டு பாவநிவாரணம் செய்யப் பட்டு விட்டது. அவன் மன்னிக்கப்பட்டு விட்டான்.

ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு வரும்வரை இவையெல்லாம் மாதிரிகளாகவும், நிழல்களாகவும் செய்யப்பட்டன. ஆனால் இயேசுவின் இரத்தம் உண்மையைச்சுட்டிக்காட்டியது.

இயேசுவின் இரத்தம் விலையேறப் பெற்றது. ஏனெனில் அதில் அவருடைய ஆத்துமா அல்லது ஜீவன் எடுத்துச் செல்லப்பட்டது. அவரது இரத்தத்தில் பாவ நிவாரண நற்பண்பும் விலையேறப் பெற்ற தன்மையுமிருந்தது. ஏனெனில் அது சிந்தப்பட்ட விதம் வித்தியாசமானது. இயேசு, பிதாவின் சித்தத்திற்கு பரிசுத்தமான கீழ்ப்படிதலுடன் உடைக்கப்பட்ட, சட்டத்திற்குரிய தண்டனையை தம்மேல் ஏற்றுக் கொண்டு, தனது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். அந்த மரணத்தினால் கட்டளை நிறைவேற்றப்பட்டதோடு பிதா மகிமைப் படுத்தப்பட்டார். பாவ பரிகாரமாக இரத்தம் செலுத்தப்பட்டு பாவம் வலிமை இழந்தது. இந்த இரத்தத்தின் வல்லமை பாவத்தை நீக்கவும், பாவிக்கு பரலோகத்தைத் திறந்து ஏற்கவும், பாவியைக் கழுகி சுத்தப் படுத்தி பரலோகத்தில் சேர்க்க வல்லமை யுடையது.

இவையெல்லாம் கர்த்தராகிய இயேசுவாகிய அற்புதமான நபரால் நிகழ்ந்தன. அவர் அற்புதமான விதத்தில் தமது இரத்தஞ் சிந்தினார். இதன் மூலம் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட தேவ கட்டளையை நிறைவேற்றினார். இவ்வாறு அவரது இரத்தம் அற்புதமான வல்லமையைப் பெற்றது. அது பாவ நிவாரண பலியின் இரத்தம். எனவே மானிடரை மீட்கும் திறமையுடையது. எல்லாவற்றையும் நிறைவேற்றியது அந்த இரத்தம். எனவே பாவிகள் இரட்சிப்பைப் பெற இது ஏதுவாயிற்று.

யார் இந்த விலையேறிய இரத்தத்தின் மதிப்பைக் கூற முடியும்? மீட்கப் பட்டவர்களது பாடலில் நித்திய காலமாக இது புகழ்ந்து பாடப்படும்.

"...ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்" வெளி.5:9.

❖ **சிலுவையில்** தேவன் தமது குணாதிசயத்தையும் தம்மையுமே வெளிப்படுத்தி விட்டார். பாவம் முற்றிலும் பரிகரிக்கப் பட்டுவிட்டது. நித்திய பரிசுத்தம் திருப்திப் படுத்தப்பட்டது. **அன்பு** வெளிப்படுத்தப் பட்டது. சாத்தான் முற்றிலும் தோற்கடிக்கப் பட்டான். விசுவாசிக்கிறவர்களுக்கு **இரட்சிப்பு** உறுதியாக்கப்பட்டுவிட்டது.

❖ திருப்தியளிக்கும் தன்மையுடைய இந்த **அன்பு** அதன் இனிய கனிகளிலிருந்து வருகிறது.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிலுவை

சிந்தனைக்கு:

அநேக ஊழியங்கள் **சிலுவை**யின் செய்தியை மையப்படுத்துவதிலிருந்து விலகிவிட்டன. இது எவ்வளவு துக்கமானது!

சபை **சிலுவை**யின் செய்தியைச் சொல்ல வேண்டும். **சிலுவை**யின் செய்தி சொல்லப்படாவிட்டால் சபை **வல்லமை** இழந்துவிடும்.

'**சிலுவையின் வார்த்தை**யை' பிரசங்கிப்பதுதான் **இரட்சிப்பு**க்குக் காரணமாயிருக்கிறது.

'**சிலுவையின் வார்த்தை**' விசுவாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் போது, அது நம்மை நமது பழைய **பாவ** வாழ்க்கையிலிருந்து விடுவித்து, தூய தேவன் நம்மில் பிரவேசிக்க வாசலைத்திறந்து, நம்மில் பிரவேசித்து, அற்புதமான ஒரு **உறவை** நம்மோடு ஏற்படுத்துகிறார்.

உலக மக்கள் உண்மையான மகத்துவமும், சந்தோஷமும் அவர்கள் **தேடிக்** கொண்டிருப்பவைகளில் இருப்பதாக சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason